முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 16-07-2024

# எத்தனை நாட்களை அறிவிப்பது?

எமர்ஜென்சி கொண்டு வரப்பட்ட ஜூன் 25 ஆம் தேதியை 'அரசியலமைப்பு கொல்லப்பட்ட தினம்' என்று 'அரசியலமைப்புச் சட்டக் காப்பாளர்களான' பா.ஜ.க. அறிவித்துள்ளது. மூன்றாவது முறையும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லது செய்ய ஆட்சிக்கு வரவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம்.

**பா.ஜ.க.வின் கடந்த பத்தாண்டுகளில் இப்படி எத்தனை நாட்களை அறிவிப்பது?**

**காஷ்மீரில் அரசியலமைப்பு கொல்லப்பட்ட தினத்தையா?**

**இசுலாமியர்க்கும் இலங்கைத் தமிழர்க்கும் குடியுரிமை பறிக்கப்பட்ட தினத்தையா?**

**கோடிக்கணக்கான விவசாயிகளிடம் இருந்து நிலங்கள் பறிக்கத் திட்டமிட்ட தினத்தையா?**

**மாநிலங்களைக் கொள்ளையடிக்கும் ஜி.எஸ்.டி. அமல்படுத்தப்பட்ட தினத்தையா?**

**இந்திய நாட்டு மக்கள் அனைவர் வீட்டில் இருந்த பணத்தையும் வழிப்பறி செய்யும் வகையில் பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட தினத்தையா? - எந்த தினத்தை 'அரசியலமைப்பு கொல்லப்பட்ட தினமாக' அறிவிப்பது?**

**அதற்கும் முன்னால் குஜராத் படுகொலைகள் நடந்த தினத்தையா?**

**அதற்கும் முன்னால், பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தையா?**

**அதற்கும் முன்னால், காந்தியார் கொல்லப்பட்ட தினத்தையா? - எந்த தினத்தை 'அரசியலமைப்பு கொல்லப்பட்ட தினமாக' அறிவிப்பது?**

இந்திய விடுதலைப் போராட்டத்தை நிராகரித்தவர்கள், அது விடுதலைப் போராட்டமே இல்லை என்று சொன்னவர்கள், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் அதனை ஏற்காதவர்கள், இந்திய தேசியக் கொடியை ஏற்காதவர்கள், தேசிய கீதத்தை ஏற்காதவர்கள், இந்திய நாட்டின் பன்முகத் தன்மையை ஏற்காதவர்கள் - இன்றைய தினம் அரசியலமைப்புச் சட்டத்தின் காவலர்களாக மாறி இருப்பதைக் காணச் சகிக்கவில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் காட்டி, 'இதனைக் காப்பாற்றுங்கள்' என்று ராகுல் காந்தி பேசிவிட்டாராம். 'இந்தியா' கூட்டணி சார்பில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள், சட்டத்தை ஒரு கையில் ஏந்தி பதவி ஏற்றுக் கொண்டார்களாம். அது ஒன்றிய ஆட்சியாளர்களை நிலைகுலைய வைத்துள்ளது. உடனே எமர்ஜென்சியைப் பற்றி சபாநாயகர் பேசுகிறார். பிரதமர் பேசுகிறார். குடியரசுத் தலைவரையும் பேச வைக்கிறார்கள்.

**எமர்ஜென்சியை எவரும் நியாயப்படுத்தவில்லை. 'எமர்ஜென்சியைக் கொண்டு வந்து தவறு செய்துவிட்டேன்' என்று இந்திரா காந்தி அவர்களே வெளிப்படையாக மன்னிப்புக் கேட்டார். எமர்ஜென்சியை வைத்து 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சியின் ஆட்சியானது மூன்று ஆண்டுகளுக்குள் முடிந்தது. 1980 ஆம் ஆண்டு மீண்டும் இந்திராவே பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தார் என்பது வரலாறு.**

எமர்ஜென்சியைப் பற்றி மற்றவர்கள் பேசலாம். அறிவிக்கப்படாத அவசர நிலையை கடந்த பத்தாண்டுகளாக அமல்படுத்தி வரும் மோடி அரசாங்கத்துக்கு எமர்ஜென்சியைக் கண்டித்துப் பேச தார்மீகத் தகுதி இல்லை.

அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் அனைத்தின் அதிகாரத்தையும் சிதைத்த ஆட்சி, பா.ஜ.க. ஆட்சி.

**தேர்தல் ஆணையத்தையே, ஆளும் கட்சியின் தொங்கு சதையாக மாற்றியதுதான் அரசியலமைப்புச் சட்டத்தைக் காக்கும் விதமா? சி.பி.ஐ., அமலாக்கத்துறை மூலமாக எதிர்க்கட்சிகளை மட்டும் வேட்டையாடுவதுதான் அரசியலமைப்புச் சட்டத்தை காக்கும் விதமா? இந்த நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எந்த பொது விஷயத்துக்காவது பொது விவாதம் நடத்தப்பட்டுள்ளதா? பிரதமர் இதுவரை பதில் சொல்லி இருக்கிறாரா? எத்தனை சட்டங்கள் விவாதமே இல்லாமல் நிறைவேற்றப்பட்டுள்ளது? இந்திய நாட்டின் வரலாற்றில் 100 எம்.பி.க்களை அவை நடவடிக்கையில் இருந்து நீக்கியதை விட அரசியலமைப்புச் சட்டம் கொல்லப்பட்ட தினம் வேண்டுமா? நாடாளுமன்ற ஜனநாயகம் கழுத்தை நெரிக்கப்பட்ட தினம் வேண்டுமா?**

கொடூரங்களின் கையில் மணிப்பூர் என்ற மாநிலம் ஒப்படைக்கப்பட்டது. பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட அவசர நிலை மாநிலம் அது. அந்த மாநிலத்துக்குப் போனாரா இந்தியப் பிரதமர் மோடி? அங்கே சட்டம் இன்னமும் யார் கையில் இருக்கிறது? குண்டு வைப்பவர்கள் கையில் இருக்கிறது. தேர்தலுக்கு முன்பும் போய் பார்க்கவில்லை. தேர்தலுக்குப் பின்னும் போய் பார்க்கவில்லை. இந்திய வரைபடத்தில் இருக்கும் மாநிலம்தானே மணிப்பூர்? அரசியலமைப்புச் சட்டத்தின் காவலர், அங்கே போய் காக்க வேண்டாமா? யார் தடுத்தது? எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள்? எத்தனை கொலைநாட்களைக் கொண்டாடுவது?

**'எங்களை வன்முறையாளர்கள் இழுத்துச் செல்லும் போது சாலையின் இருபக்கமும் போலீஸ் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது' என்று ஆயிரக்கணக்கானவர்களால் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட பெண் பேட்டி அளித்தாரே அப்போது அம்மணமாக நின்றது, இந்த நாட்டின் சட்டங்கள் அல்லவா?**

இது யாருடைய ஆட்சியில் நடந்தது? மாநிலத்திலும் ஒன்றியத்திலும் பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் போது நடந்தது என்று ஐம்பது ஆண்டுகள் கழித்துப் பேச எவரும் இருக்க மாட்டார்களா? 'பயாலாஜிக்கலாக பிறக்காத பிரதமர்' என்பதால் இவை அனைத்தும் அரூபமாக மறக்கப்பட்டு விடுமா? 'அவதாரம்' என்பதால் மன்னித்து விட்டு விடுவார்களா?

தவறு இழைத்தால், அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளப் பாருங்கள். அதில் இருந்து தப்பியோட முயற்சிக்காதீர்கள். திசைதிருப்ப முனையாதீர்கள். தேசியத்தின் பேரால் ஒற்றைத்தன்மையை நிலைநாட்ட முயற்சித்து, இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து நாட்டையே மதரீதியாக மட்டுமல்ல, மனரீதியாகப் பிளவுபடுத்தும் சதிச் செயல்களை நிறுத்திவிட்டு ஆட்சி நடத்தப் பாருங்கள்.

அரசியலமைப்பு கொல்லப்பட்ட தினங்களின் எண்ணிக்கையை உயர்த்தி விடாமல் ஆளப்பாருங்கள். சட்டபூர்வமான ஆட்சியே சட்டத்தைக் காத்துக் கொள்ளும். பன்முகத்தன்மையே சட்டத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (14.7.2024) விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி அன்னியூர் சிவா சந்தித்து வெற்றிச் சான்றிதழைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். அமைச்சர் பெருமக்கள் துரைமுருகன், கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் எ.வ.வேலு, கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர்கள் அர.சக்கரபாணி, தா.மோ.அன்பரசன், சா.சி.சிவசங்கர், ஆர்.காந்தி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், விழுப்புரம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் பொன். கௌதம சிகாமணி, ப.சேகர் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.7.2024) அண்ணா அறிவாலயத்தில், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி அன்னியூர் சிவா சந்தித்து வாழ்த்து பெற்றார். அமைச்சர் பெருமக்கள் முனைவர் க. பொன்முடி, எ.வ.வேலு, செஞ்சி கே.எஸ். மஸ்தான், விழுப்புரம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் பொன். கௌதம சிகாமணி, ப.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து

## தமிழ்நாடு முதல்வர் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்!

### அறந்தாங்கியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, ஜூலை16 -

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் என அறந்தாங்கியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசிய போது குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, தாலீப் திருமண மஹாலில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில், அரசு/நகராட்சி/ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, கையடக்கக் கணினிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 12.07.2024 அன்று வழங்கினார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் மாணவ, மாணவிகளுக்கு தேவையான திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், அகண்ட வரிசை இணையதள வசதி உள்ளிட்ட பல்வேறு கல்வி சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி அரசு / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, கையடக்கக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், மாணவ, மாணவிகளிடையே மாறிவரும் கற்றல், கற்பித்தல் முறைகளுக்கேற்ப ஆசிரியர்கள் தங்களை மெருகேற்றிக் கொள்வதற்கு அனைத்து அரசு / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு கையடக்கக் கணினி மாநிலத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 3,274 எண்ணிக்கையில் பெறப்பட்டுள்ளது.

இதில் அறந்தாங்கி கல்வி மாவட்டத்தில் 472 அரசு தொடக்கப்பள்ளிகள் மற்றும் 143 அரசு நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1,438 கையடக்கக் கணினி (TAB) வழங்கப்படுகின்றது.

மாநில திட்ட இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கையடக்கக் கணினி (TAB) அறந்தாங்கி மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி) நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அறந்தாங்கி வட்டார கல்வி அலுவலகத்திற்கு 323 எண்ணிக்கையிலும், அரிமளம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு 178 எண்ணிக்கையிலும், ஆவுடையார்கோவில் வட்டார கல்வி அலுவலகத்திற்கு 180 எண்ணிக்கையிலும், கறம்பக்குடி வட்டார கல்வி அலுவலகத்திற்கு 257 எண்ணிக்கையிலும், மணமேல்குடி வட்டார கல்வி அலுவலகத்திற்கு 181 எண்ணிக்கையிலும், திருவரங்குளம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு 319 எண்ணிக்கையிலும் மொத்தம் 1,438 எண்ணிக்கையில் கையடக்கக் கணினிகள் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்கிட ஆசிரியர்கள் அனைவரும் இந்த கையடக்கக் கணினிகளை பயன்படுத்தி சிறப்பாக கல்வி பயிற்றுவிக்க வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஆர்.ரம்யாதேவி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், அறந்தாங்கி நகர் மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வட்டாட்சியர் திருநாவுக்கரசு, எல்.குமார், மணிமொழியன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### ஜம்மு - காஷ்மீரில்

## 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை!

காஷ்மீர், ஜூலை 16-

ஜம்மு - காஷ்மீர் எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் அத்துமீறி ஊடுருவிய 3 பயங்கரவாதிகளை ராணுவ வீரர்கள் சுட்டு வீழ்த்தினர்.

ஜம்மு - காஷ்மீரின் குப்வாரா பகுதியில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவியதாக தகவல் கிடைத்தது.

இதனையடுத்து குப்வாரா பகுதிக்குட்பட்ட கேரன் செக்டாரில் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, ஊரகப் பகுதிகளில் அரசு உதவிபெறும், தொடக்கப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்து மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை, திருவள்ளூர் மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இதனையடுத்து கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆடூர்குப்பம் கிராமம், இராதாகிருஷ்ணன் கல்வி நிலைய நடுநிலைப் பள்ளியில், மாவட்ட ஆட்சியர் டாக்டர் அ.அருண்தம்புராஜ் தலைமையில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாணவர்களுக்கு காலை உணவு பரிமாறி, அவர்களுக்கு உணவினை ஊட்டியும், மாணாக்கர்களுடன் அமர்ந்து காலை உணவு உண்டார். இந்நிகழ்வில் எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.